[2002 ஏப்ரல் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 223, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.*

223—

குடியிருப்பு

***3659—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அரசு ஊழியர்கள் அதிகம் வசிப்பதால், வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா;

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. நா. சந்திரமோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், என் தாயை வணங்குகிறேன். நாகை மாவட்டம், சீர்காழி தொகுதியில் அனைத்து அரசு அலுவலகங்களும் சீர்காழி நகரத்தில்தான் அமைந்துள்ளன. தாலுகா தலைமையிடமாக இருப்பதால், அனைத்து அலுவலகங்களிலும் சுமார் ஆயிரம் அரசு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். பெரும்பான்மையானவர்கள் வெளியூர்களிலிருந்து புகைவண்டி மூலமும், பேருந்துகள் மூலமுமாக வந்து பணிபுரிகின்றனர். இவர்களுக்கு சீர்காழியில் குடியிருக்க வீடு கிடைக்காத சூழ்நிலை உள்ளது. சீர்காழி நகரில் குடியிருக்க வீடு கிடைத்தாலும், அதற்கு முன்பணமாக ரூ.10,000-லிருந்து ரூ.50,000 வரை கேட்கிறார்கள். மேலும், அரசு ஊழியர்கள் வாங்கும் சம்பளத்தில் பாதிப் பணம் வீட்டு வாடகையாகப் போய்விடுகின்றது. அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்ட சீர்காழி நகரில் போதிய இடவசதியும் உள்ளது. எனவே, அரசு அலுவலர்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றித்தரும் வகையில், அடுத்த நிதியாண்டிலாவது அரசு ஊழியர்களுக்குக்*

குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி ஒரு தாலுகா தலைமையிடம் என்பதால் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் செயல்படுத்த இயலாது. மேலும், தற்போதுள்ள நிதிநிலைமையினைக் கருத்தில்கொண்டால் அரசு அலுவலர்களின் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, திரு. கோ. இரவிராஜ். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

224—

கால்நடை மருந்தகம்

***10508—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதியிலே, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உளுந்தை கிராமத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 50 கிராமங்களுக்கு மேலாக, விவசாயப் பெருங்குடி மக்கள் கால்நடைகளைப்